பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 04 | வியாழக்கிழமை | 18.01.2024 | அதிர்வு 170

## லொறி - ஓட்டோ மோதி ஒருவர் பரிதாப மரணம்

### மூவர் வைத்தியசாலையில்



(பழுவூரான்)

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் குருக்கள்மடத்தில் 06▶

## மாங்குளம் துவரங்குள விவசாயிகள் 53 பேர் மீது வனவளப் பிரிவு தொடுத்த வழக்குகள் தள்ளுபடி

### சுமந்திரனின் நீண்ட சமர்ப்பணத்தின் பின் நீதிமன்றம் முடிவு




முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட துவரங்குளம் பகுதியில் விவசாயத்தில் ஈடுபடுவதற்காக தமது காணிகளைத் துப்புரவு செய்த 53 குடியிருப்பாளர்களைகைதுசெய்து, அவர்களுக்குஎதிராக வனவளத் திணைக்களத்தினர் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் ஒரு மணி நேர சட்ட சமர்ப்பணத்தின் பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது.

53 குடியிருப்பாளர்களையும் விடுதலை செய்த நீதிமன்றம், அதன் மூலம் அவர்கள் தத்தமது நிலங்களில் தடையின்றி விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இடம் அளித்தது.

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் மாங்குளம் சுற்று அமர்வு 06▶



# மொட்டுவின் வேட்பாளராக ரணிலும் போட்டியிடலாம்!

### வாய்ப்புத் தாராளமாக உண்டு என்கிறார் நாமல்

**ஜனாதிபதித் தேர்தலின்போது மொட்டுக் கட்சியின் சார்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் போட்டியிடும் சந்தர்ப்பம் இருக்கின்றது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.** 06▶

## முதலையால் கவ்விச் செல்லப்பட்ட 11 வயது சிறுவன் சடலமாக மீட்பு!



கடுவலை பகுதியில் களனி ஆற்றில் நேற்றுக் காலை நீராடச் சென்ற நிலையில் முதலையால் கவ்விச் செல்லப்பட்டுக் காணாமல்போன சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பத்தளை நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகில் சிறுவனின்சடலம்நேற்றுமாலை மீட்கப்பட்டுள்ளது. 06▶



நாய்வாலைநிமிர்த்த முடியாது என்பார்கள். உண்மை.

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை குழப்பி, அதனைத் தள்ளிப் போட வைக்கும் விடயத்திலும் சம்பந்தப்பட்ட தரப்புகள் திருந்துபவையாக இல்லை. நிமிர்த்த முடியாத நாய் வால் மாதிரித்தான் செயல்படுகின்றன.

இன்னும் மூன்று நாள்களில் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு முன்னோடியான தலைவர் தேர்வுக்குரிய 06▶

# தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு திட்டமிட்டபடி 21 ஆம் திகதி நடக்கும்

## ஏற்பாடுகள் பூர்த்தி என்கிறார் சுமந்திரன்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக கட்சியின் பொதுச்சபையில் அங்கம் வகிப்பவர்களுக்கான கடிதங்கள் அனுப்பட்டுள்ளன எனப் பொதுச்செயலாளர் மூலம் அறிந்திருக்கின்றேன். ஆகவே திட்டமிட்டபடி எதிர் வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தலைவர் தெரிவு நடைபெறும்.

– இவ்வாறு அக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.


இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் தெரிவு உட்கட்சி ஜனநாயகத்தை வெளிப்படுத்தும்.

கட்சியின் தலைவர் தெரிவு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு திருகோணமலையிலே இடம்பெற இருக்கின்றது. இதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என நானும் அறிகின்றேன்.

நானும் தலைவர் பதவி போட்டியிலே இருக்கும் காரணத்தினால் இந்த ஆயத்தங்கள் செய்யப்பட்டிருப்பது தொடர்பாக வினவிக்கொண்டு இருக்கிறேன்.

பொதுச்சபையிலே அங்கம் வகிப்பவர்களுக்கான கடிதங்கள் அனுப்பட்டு விட்டன எனப் பொதுச்செயலாளர் மூலம் அறிந்திருக்கின்றேன். ஆகவே திட்டமிட்டபடி எதிர்வரும் 21ஆம் திகதி இந்த தேர்தல் உச்ச கட்டமாக உட்கட்சி ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் விதத்தில் திருகோணமலையில் நடைபெற்று நல்லதொரு முடிவு வருமென நாம் எதிர் பார்க்கின்றோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# பணம் வசூலித்து மேலதிக வகுப்புகளை நடத்திய 51 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்



பணம் வசூலித்து மேலதிக வகுப்புகளை நடத்திய 51 பாடசாலை ஆசிரியர்களை அவர்கள் பணிபுரியும் பாடசாலைகளில் இருந்து வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்ய மத்திய மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம் உள்ளிட்ட பாடங்களுக்குப் பணம் வசூலித்து பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்கள் தொடர்பில் மத்திய மாகாண கல்வி அமைச்சுக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசேட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இந்த சுற்றறிக்கையை மீறி சில ஆசிரியர்கள் மேலதிக வகுப்புகளை நடத்துகின்றனர் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மத்திய மாகாண கல்வி அமைச்சும் விசேட சுற்றிவளைப்பு பிரிவை நிறுவி உரிய இடங்களில் சோதனை நடத்தியது.

சுற்றிவளைப்பிற்காக விசேட குழுவொன்று உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு முறையான விசாரணை நடத்தப்பட்டது.

இதன்போது சில ஆசிரியர்கள் தமது வகுப்பு மாணவர்களை மேலதிக வகுப்பில் பங்கேற்குமாறு அழுத்தம் கொடுக்கின்றனர் எனக் கல்வி அமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் சுற்றறிக்கையை மீறிய ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# சட்டவிரோத மின்வேலிகள் தொடர்பில் அறிவிக்க அவசர தொலைபேசி இலக்கம்



2023 ஆம் ஆண்டில் சட்டவிரோத மின்வேலிகள் காரணமாக சுமார் 50 யானைகள் உயிரிழந்துள்ளன என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன்இ பல்வேறு மனித நடவடிக்கைகளால் 2023 ஆம் ஆண்டில் 474 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளன என அந்தச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

புள்ளிவிவரங்களுக்கமையஇ இலங்கையில் சுமார் 6 ஆயிரம் காட்டு யானைகள் வசித்து வருகின்றன. இந்த நிலையில் மேற்படி மரணங்கள் ஏற்பட்டுள்ளன என இலங்கை மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தச் சட்டவிரோத செயல்கள் தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள மின்சார சபை அதற்கு மக்களின் ஆதரவும் தேவையெனவும் குறிப்பிட்டுள்ளது.

இதன்படிஇ சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள மின்வேலிகள் அல்லது இணைப்புகளுக்கு அனுமதியின்றி மின்சாரம் வழங்கப்படுவது தொடர்பில் 1987 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இலங்கை மின்சார சபைக்கு உடனடியாக அறிவிக்குமாறும் இலங்கை மின்சார சபை மக்களைக் கோரியுள்ளது.



# புதிய முதலீடுகள் தொடர்பில் நம்பிக்கை வைத்துள்ளோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான குறுகிய கால மூலோபாயமாக சுற்றுலா ஊக்குவிப்பு, விவசாய நவீனமயமாக்கல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும், இவற்றுக்காக இலங்கை தற்போது புதிய முதலீடுகளை ஈர்க்கும் நம்பிக்கையில் இருக்கின்றது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தில் நேற்று நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தின் பங்குதாரர்கள் உரையாடலின் ஒரு அங்கமான நிபுணர் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

விளிம்பிலிருந்து பின்வாங்குதல் என்ற தலைப்பில் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஜனாதிபதி, இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கினார்.

இலங்கையின் எதிர்கால நோக்கு மற்றும் கடனை திருப்பிச் செலுத்துவதற்கான அணுகுமுறை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, இலங்கை இதுவரை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தை கோடிட்டுக் காட்டியதுடன், இந்த ஆண்டு 2 சதவீத பொருளாதார வளர்ச்சியை இலங்கை எதிர்பார்ப்பதாகவும், அடுத்த வருடம் அதனை 5 சதவீதமாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் படி, அரசாங்க வருவாயை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், வருவாய் சேகரிப்பு உத்திகளில் சீர்திருத்தம் மற்றும் வருவாய் ஆணைக்குழு உள்ளிட்ட நிறுவன ரீதியான கட்டமைப்பை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் குறித்து அவர் விளக்கினார்.

அதேநேரம் இந்த சந்திப்பில் பாரம்பரிய நிதி விதிகளை கடைபிடிக்கும் போது பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

மக்களுக்கு அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்கும் கடுமையான நிதிச் சட்ட விதிகளை நிர்வகிப்பதற்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வரி அதிகரிப்பு காரணமாக மக்களுக்கு ஏற்படக் கூடிய அதிருப்தி குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, இலங்கை வெளிநாட்டு முதலீடுகளுக்குப் பழகிவிட்டதாகவும், அதற்கு நாடு திறந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஆபிரிக்க நாடுகள் எதிர்நோக்கும் தனித்துவமான சவால்கள் குறித்தும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அவர்களுக்கான கடன் நிவாரணம் வழங்குவதற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், அதற்கான கூட்டு முயற்சியின் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.





# கங்காராம விகாரையில் இந்தியத் தூதர் வழிபாடு

இந்திய – இலங்கை மக்களின் ஆரோக்கியம், அமைதி மற்றும் செழுமை ஆகியவற்றை வேண்டியும் இரு நாடுகளுக்கும் இடையிலான நிலையான நட்புறவை வேண்டியும் புத்தபெருமானிடம் பிரார்த்திப்பதற்காக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, கங்காராம விகாரைக்கு நேற்றுக் காலை விஜயம் செய்திருந்தார்.

இதன்போது தூதுவரின் துணைவியாரான திருமதி தனுஜாவும் இணைந்துகொண்டிருந்தார்.

விகாரையின் பிரதி குருவான சங்கைக்குரிய கலாநிதி கிரிந்தே அஸாஜி தேரர் இந்தியத் தூதுவரை விகாரையில் வரவேற்றதுடன், 2017 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இவ்விகாரைக்கு விஜயம் மேற்கொண்டு சர்வதேச வெசாக் தின நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தமையை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்திருந்தார்.

அத்துடன் புத்தபெருமான் ஞானம் பெற்ற இந்திய மண்ணில் தான் கற்றுக்கொண்ட விடயங்களையும் இச்சந்தர்ப்பத்தில் பகிர்ந்து கொண்டிருந்த சங்கைக்குரிய அசாதி தேரர், இரு நாடுகளுக்கும் இடையிலான நாகரிக உறவுகளின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து இவ்விகாரையில் நடைபெற்ற விசேட பூஜையை அடுத்து இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் திருமதி தனுஜா ஜாவுக்கும் புனித பிரித் நூலினை அணிவித்து அவர் ஆசி வழங்கினார்.

இச்சந்தர்ப்பத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக ரீதியான உறவுகளை குறிப்பாக ஆழமாக வேரூன்றி இருக்கும் நாகரிக, வரலாற்று, மத மற்றும் கலாசார ரீதியிலான பிணைப்புகளை வலுப்படுத்துவதற்காக இந்தியத் தலைமைத்துவம் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை இந்தியத் தூதுவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்திய அரசால் வழங்கப்பட்ட ஒரு கோடி அமெரிக்க டொலர் நன்கொடையின் கீழ் மத ஸ்தலங்களை சூரிய மின்சக்தி மூலமாக இணைப்பதற்காக அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான பௌத்த உறவுகளை வலுவாக்குவதற்காக முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பௌத்த துறவிகள் இந்தியாவில் கல்வியினை தொடர்வதற்காக வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டங்கள் குறித்தும் சங்கைக்குரிய தேரருடன் தூதுவர் கலந்துரையாடியிருந்தார்.

இருதரப்பு ஒத்துழைப்பின் மையப் பகுதியில் மக்களை இலக்காகக் கொண்டு இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கைக்கு அமைவாக இலங்கையுடன் வலுவான சகலதுறை ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா கொண்டிருக்கும் வலுவான உறுதிப்பாட்டையும் தூதுவர் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திந்தால் சட்ட நடவடிக்கை!

**சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு**

(அஸ்ஹர் இப்றாஹிம்)



அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் பெய்த அடை மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக சாய்ந்தமருது பிரதேசத்தில் பள்ளமான இடங்களில் தற்போதும் வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது. இது டெங்கு குடம்பிகள் உற்பத்தியாவதற்கான தகுந்த சூழலாகும்.

எனவே டெங்கு குடம்பிகள் உருவாக ஏதுவான காரணிகளை பொது மக்கள் அடையாளம் கண்டு அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டெங்கு பரவும் சூழலைப் பேணும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்ஸத் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், மத ஸ்தாபனங்கள், வீடுகள், வெற்று வளவுகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வியாபார ஸ்தலங்கள் என்பவற்றுக்கு பொது சுகாதார பரிசோதகர்களும், சாய்ந்தமருது பொலிஸாரும் தற்போது பரிசீலணை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் .

அத்துடன் கல்முனை மாநகர சபை திண்ம கழிவகற்றல் வாகனங்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எனவே பொது மக்கள் டெங்கு நுளம்புகளை சாய்ந்தமருது பிரதேசத்தில் இருந்து முற்றாக இல்லாதொழிப்பதற்கு உதவி புரியுமாறு டாக்டர் அர்ஸத் காரியப்பர் கேட்டுள்ளார்.



# ஈஸ்டர் குண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்ப உறவுகளுக்கு உலர் உணவுகள்

(பழுவூரான்)

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்ப மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (16) வழங்கப்பட்டன.

சாக் பெண்கள் அமைப்பின் அனுசரணையில் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் எகெட் கரித்தாஸ் நிறுவன இயக்குனர் அருட்பணி ஜேசுதாசன் அடிகளார் தலைமையில் உலர் உணர்வு பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மறை மாவட்ட குரு முதல்வர் ஜோர்ச் ஜீவராஜ், சாக் பெண்கள் அமைப்பின் பெண் பிரதிநிதிகள், எகெட் கரித்தாஸ் நிறுவன உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஆஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் கலாசூரி சிவகுருநாதன் நூல் வெளியீடு


அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முகமாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் நடைபெறவுள்ளது.

கன்பராவில் உள்ள தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபத்தில் சட்டத்தரணி, இலக்கிய ஆர்வலர், எழுத்தாளர் க. திருவருள் வள்ளல் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர்.

நிகழ்வில் மூத்த எழுத்தாளர் லெ. முருகபூபதி நூலை அறிமுகம் செய்து சிறப்புரை வழங்குவார். நிமலன் கார்த்திகேயன், இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதனை பற்றிய சிறப்புரை நிகழ்த்துவார். தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி தொடர்பில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான சுந்தரதாஸ் உரையாற்றுவார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல். பத்து நாள்களில் தேசிய மாநாடு. இந்த இரண்டுக்கும் இடையில் குழப்பம் பண்ணக்கூடியதாகக் காய் நகர்த்தல்கள் நடப்பதாகச் சந்தேகம்.

தேசிய மாநாடு தொடர்பில் கட்சியின் மத்திய குழு பல தடவைகள் கூடிய ஆராய்ந்து, தீர்மானங்களை எடுத்துள்ளது. தேசிய மாநாட்டில் பங்கு பற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் தொடர்பில் அது தெளிவான முடிவுகளை எட்டி இருக்கின்றது. அவற்றில் இரண்டு முடிவுகள் – தீர்மானங்கள் – முக்கியமானவை.

ஒன்று – கட்சியின் யாப்புக்கு அமைய மாநாட்டை நடத்துவது என்பது.

அடுத்தது – கட்சியின் இரண்டு கிளைகள் சம்பந்தமான விடயங்களில் மட்டும் புறநடை ஒழுங்குகளை மேற்கொள்வது என்ற முடிவு. அவை, முறையே திருகோணமலை மற்றும் கொழும்பு கிளைகள். அவற்றின் சார்பிலான பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்வு குறித்துக் குழப்பங்கள் நிலவுகின்றமையால் அவற்றை தீர்ப்பதற்காக திருகோணமலைக்கு மேலும் ஆறு உறுப்பினர்களையும் கொழும்புக்கு மேலும் மூன்று உறுப்பினர்களையும் மட்டும் பொதுக்குழுவிற்குச் சேர்த்துக் கொள்வது என்பது.

இவைதான் மத்திய குழு எடுத்த தீர்மானம்.

ஒவ்வொரு (தொகுதிக்) கிளையின் சார்பிலும் தலா ஐந்து உறுப்பினர்கள் மற்றும் திருகோணமலை மற்றும் கொழும்பு கிளைகளின் சார்பில் மேலதிகமாக 9 உறுப்பினர்கள், அத்தோடு மற்றும் தற்போதைய மத்திய குழுவின் உறுப்பினர்கள். – இவர்கள்தான் பொதுக் குழுவிலன் பிரதிநிதிகளாக கூட்டத்தில் பங்கு பற்ற முடியும். வாக்களிக்கவும் உரிமை உள்ளவர்கள்.

இதுதான் மத்திய குழுவின் முடிவு. இதற்கு மாறாக, கட்சியின் தற்போதைய தலைவர் தம்மிஷ்டப்படி பொதுக்குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிப்பது, அதற்கு அனுமதிப்பது என்பன எல்லாம் கட்சியின் யாப்பில் இல்லாத விடயங்கள்.

முன்னைய காலங்களில் கட்சி நிர்வாகிகள் தேர்வு வாக்கெடுப்பு வரை செல்லாத நிலையில் அப்படி தலைவர்கள் தமக்கு விருப்பமான சிலரை பொதுக்குழு கூட்டங்களுக்கு அழைப்பதை அனுமதிக்கும் முறைமை அவ்வப்போது இருந்தமை உண்டு.

ஆனால் அது யாப்பு ரீதியான ஏற்பாடோ, ஒழுங்கோ அல்ல. வாக்களிப்பு இல்லாமல் கட்சி நிர்வாகிகள் தெரிவுகள் நடைபெறுகின்றமையால் அப்படி சில உறுப்பினர்கள் பொதுக்குழுக் கூட்டத்துக்கு தலைவரின் விருப்பத்துக்கு இணங்க பிரசன்னமாகி இருக்கின்றமை பெரிய குழப்பத்தைத் தராது என்ற அடிப்படையில் அது அனுமதிக்கப்பட்டு வந்தது.

ஆனால் இம்முறை நிலைமை வேறு. போதாக்குறைக்கு யாப்பின்படியும், மத்திய குழுவின் வழிகாட்டல் படியும் தேசிய மாநாட்டை நடத்தி முடிப்பது என்று இறுக்கமான தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணி புரிந்தும் – இந்த வகைக்குள் அடங்காத ஒரு சிலர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களையும் பொதுக்குழுவுக்கு அழைக்கும்படி – அதாவது ஞாயிறன்று நடக்கும் தலைவர் தேர்வு வாக்களிப்புக்கு அவர்களுக்கும் இடமளிக்கும்படி – கட்சியின் பொதுச் செயலாளருக்கும் நிர்வாகச் செயலாளருக்கும் அழுத்தம் கொடுக்கின்றார் கட்சித் தலைவர் என்று தெரிகின்றது.

அப்படித் தகுதியற்ற 5 முதல் 10 பேர் வாக்களிப்பில் கலந்து கொண்டால், முடிவுகளை ஒட்டிக் குழப்பம் வரும் அல்லது முடிவுகளை ஒட்டி யாராவது நீதிமன்றத்துக்குப் போக, தேசிய மாநாட்டுக்குத் தடை விதிக்கப்படும். தாம் தலைவர் பதவியில் தொடர முடியும் என்று கட்சியின் தற்போதைய தலைவர் மனக் கணக்குப் போடுகின்றார் போலும்.

ஆனால் இதில் எதிர்பாராத திருப்பம் ஒன்று இருக்கின்றமையை அவர் (கட்சித் தலைவர்) புரிந்து கொள்ளாமல் இருக்கின்றார். தப்பித் தவறி அப்படி நேர்ந்து, கடைசி நேரத்தில் கட்சி செயல்பட முடியாத இக்கட்டு வந்தால், அது கட்சியை மட்டும் பாதிக்காது. அந்த நிலைமையை கட்சிக்கு ஏற்படுத்தியமைக்காக நிதி அபராத தண்டனை உட்பட சில நெருக்கடிகளை அவரே எதிர்கொள்ள நேரும்.

அவரின் தவறான வழிகாட்டுதல்களுக்கு இணங்கிப் போகும் கட்சியின் தற்போதைய நிர்வாகிகளும், அந்தத் தவறுகளுக்கு அவருடன் சேர்ந்து பொறுப்பேற்க வேண்டி ஏற்படும்.

எது, எப்படி என்றாலும் ஞாயிறன்று நடைபெறவிருக்கும் தலைவர் தேர்வுக்கு முதல் நாள் – நாளை மறுதினம் – திருகோணமலையில் கட்சியின் மத்திய குழு இறுதியாகக் கூடவிருக்கின்றது. அதில் தலைவர் மாவை சேனாதிராஜாவின் தவறான நகர்வுகளுக்கு 'செக் மேட்' வைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

## லொறி - ஓட்டோ மோதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்துள்ளனர் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றும், களுவாஞ்சிக்குடியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதியுள்ளன.

இந்தச்சம்பவத்தில்ஓட்டோவில்பணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் மண்டூர் பகுதியைச் சேர்ந்தவர் எனவும், காயமடைந்த ஏனையோரும் மண்டூர் மற்றும் எருவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் விபத்து இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற களுவாஞ்சிக்குடி போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், விபத்துக்குள்ளான வாகனங்களையும், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

## மாங்குளம் துவரங்குள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுப் பிற்பகல் நடைபெற்றபோது அங்கு இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் சார்பில் சுமந்திரன் அங்கு நீண்ட சட்ட வாதத்தைச் சமர்ப்பணம் செய்தார்.

நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த பெரும்பாலும் அனைத்துத் தமிழ்ச் சட்டத்தரணிகளும் இவ்வழக்கில் சுமந்திரனுடன் தாங்களும் மேற்படி குடியிருப்பாளர்கள் சார்பில் முன்னிலையாகின்றனர் எனப் பதிவு செய்தனர்.

சுமந்திரனின் சமர்ப்பணத்தைக் கவனத்தில் எடுத்த நீதிவான் பிரதீபன் வனவளத் துறையினரின் வழக்குகளைத் தள்ளுபடி செய்து 53 குடியிருப்பார்களையும் விடுதலை செய்தார்.

## முதலையால் கல்விச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடுவலை – வெலிவிட்ட பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய சிறுவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் மற்றும் சுழியோடிகள் இணைந்து சிறுவனைத் தேடும் பணியில் ஈடுபட்டபோதே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

## மொட்டுவின் வேட்பாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பத்தரமுல்லை கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டாவறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"தற்போதைக்கு மொட்டுக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதற்கு நான்கு வேட்பாளர்களின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளன. அந்த நான்கு பெயர்களில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உள்ளது.

எவ்வாறெனினும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய ஒருவரே வேட்பாளராக நியமிக்கப்படுவார். அதன் காரணமாக கடைசி நேரத்தில் இந்தப் பட்டியலில் பெயர் இல்லாத புதிய ஒருவர் கூட களமிறக்கப்படலாம்.

வேட்பாளர் குறித்து கவலைப்படத் தேவையில்லை. வேட்பாளர் யார் என்பது முக்கியமல்ல. வெற்றி பெற முடியுமா என்பதுதான் முக்கியம்.

ஏனெனில் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கும் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

அத்துடன், எமது அரசியல் முகாமுக்கு வெற்றியைத் தரும் எந்தக் கட்சி அல்லது சக்தியுடன் வேண்டுமானாலும் பேச்சு நடத்தத் தயார்.

மேலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை மறுசீரமைப்பதற்காகக் கிராமிய மக்களைத் தெளிவூட்டும் வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது." – என்றார்.



# இலங்கையின் பொருளாதார நோக்கு குறித்து இந்திய நிறுவனத் தலைவர்களுக்கு விளக்கம்

நிலையான பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும் பல முக்கிய சவால்களை இலங்கையால் வெற்றிகொள்ள முடிந்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

இந்திய கைத்தொழில் குழு மற்றும் உலக பொருளாதார மன்றம் இணைந்து நேற்றுமுன்தினம் சுவிட்சர்லாந்தில் ஏற்பாடு செய்திருந்த வட்டமேசை கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பரந்த பொருளாதார நோக்கு குறித்து விளக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விநியோகத்திற்கான தடைகளுக்கு வெற்றிகரமாக தீர்வு வழங்கல், இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் அந்நிய செலாவணி பணப்புழக்கத்தை சீராக்குதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளின் மூலம் சவால்களை குறுகிய காலத்தில் சமாளிக்க முடிந்தது என்று சுட்டிக்காட்டினார்.

இலங்கை தனது வர்த்தக உடன்படிக்கைகளை தீவிரமாக விஸ்தரித்து வருவதாகவும், அதற்கமைவாக இலங்கை அண்மையில் சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும், தாய்லாந்துடன் பெப்ரவரி மாதம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

மேலும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்காக இந்தியா, சீனா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் இலங்கை பேச்சு நடத்தி வருவதாகவும், இதன் ஊடாக உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்புக்கு இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் அரச நிறுவனங்களில் தனியார் முதலீட்டை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொலைத்தொடர்பு, நிதிச் சேவைகள் மற்றும் எரிசக்தி போன்ற இலங்கையின் முக்கிய துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

கடற்கரையை அண்டியதாக காற்றாலை மற்றும் சூரிய சக்தி குறித்து கவனம் செலுத்தி புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்கு இந்தியாவுடன் ஒத்துழைப்பதன் மூலம் நிலையான ஆற்றல் தீர்வுகளில் இலங்கை கவனம் செலுத்தியுள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அதிக திறன் கொண்ட இருதரப்பு மின்சார இணைப்பை ஏற்படுத்துவதற்கு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தியாவுடனான பண்டங்கள் மற்றும் சேவைகள், சுங்க ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக வசதிக்கான திட்டங்களை முன்வைத்து இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களுக்கு இந்திய ரூபாவைப் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, கல்வி, கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்துவதுடன் சுற்றுலா மற்றும் சமூக உறவுகளை மேம்படுத்த இலங்கை எதிர்பார்ப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளுடனான இந்த வட்டமேசை கலந்துரையாடலில் , விநியோகச் சங்கிலித் திறனை மேம்படுத்துதல், சுகாதாரம், நுகர்வுப் பொருட்கள், தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் பசுமை ஆற்றல் போன்ற துறைகளில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையானது பல்வேறு முதலீடுகளுக்கு சிறந்த இடமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதுடன், டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் முக்கிய வாய்ப்புகள் உள்ளதோடு, உட்கட்டமைப்பு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்புடன் செயற்படும் திறன் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தீர்ப்பின் பின்னணியில்...!

நாடாளுமன்ற உறுப்பினர் பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரா படுகொலை வழக்கில் துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பிலிருந்து அவரை விடுவித்து, அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த உத்தரவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கின்றது.

இந்தத் தீர்ப்பை ஒட்டிய சில விடயங்கள் கவனத்தில்எடுக்கப்படவேண்டியவையாகஇருக்கின்றன. இந்தப் பொதுமன்னிப்பை நாட்டின் நலன் கருதி தாம் வழங்கினார் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது சத்தியக்கடதாசியில் குறிப்பிட்டிருந்தார். ஆயினும் நாட்டின் அந்த நலன் யாது என்பதை அவர் விவரிக்கவே இல்லை என உயர் நீதிமன்றம் தனது உத்தரவில் சுட்டிக்காட்டி உள்ளது. அதுமட்டுமல்ல, அது தொடர்பான எழுத்து மூல ஆவணங்கள் ஏதும் கூட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அப்படி ஆவணங்கள் ஜனாதிபதி செயலகத்தில் இல்லை என்ற கருத்து உயர்நீதிமன்றுக்கு இதனால் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பொது மன்னிப்பு தொடர்பாக சட்டமா அதிபர் தரப்பின் வழிகாட்டல்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய முறையில் பெற்றுச் செயற்படவில்லை என்ற முடிவுக்கு சட்டமா அதிபர் தரப்பு ஆவணங்கள், வாதங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் உயர் நீதிமன்றம் வந்திருக்கிறது.

2021 ஜனவரியில் துமிந்த சில்வாவுக்குப் பொது மன்னிப்பை வழங்கினார் கோட்டாபய ராஜபக்ஷ. அந்த மன்னிப்பு வழங்கப்பட்டமையை ஆட்சேபித்து அடுத்த 31 நாள்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதற்குப் பின்னரும் சுமார் ஒன்றரை ஆண்டுகள் - 2022 ஜூலை வரை - கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் நீடித்திருக்கின்றார். ஆனால் இந்த வழக்குத் தொடர்பில் - துமிந்த சில்வாவுக்குத் தான் பொதுமன்னிப்பு வழங்கிய விடயம் தொடர்பில் - கோவைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையை ஜனாதிபதி தரப்போ அவரது அலுவலகமோ மேற்கொள்ளவில்லை. விட்டேத்தியாக இருந்திருக்கின்றனர் என்பது இப்போது உயர்நீதிமன்ற தீர்ப்பினால் துலாம்பரமாகி உள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும், அதற்கு முன்னர் நல்லாட்சி அரசின் காலத்தில் - 2015 ஜனவரி முதல் 2019 நவம்பர் வரை - இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் குறித்து விசாரித்து அறிக்கை தருவதற்காக ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்திருந்தார்.

அந்த ஆணை குழு தன் அறிக்கையில் துமிந்த சில்வாவுக்குஎதிரானபடுகொலைவழக்குவிசாரணை மீள மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது அவர் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரை வழங்கியிருந்தது. சம்பந்தன், சுமந்திரன் உட்பட சில நாடாளுமன்ற தெரிவுக் குழுக்களில் இடம்பெற்றிருந்தவர்களுக்கு எதிராக குற்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டும், விளக்கமறியலில் இருக்கும் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) விடுவிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் பரிந்துரைகளை வழங்கியது அந்த ஆணைக்குழு.

அதே சமயம் மரண தண்டனைக் கைதியாகச் சிறையில் இருக்கும் துமிந்த சில்வாவை பொது மன்னிப்பு அளித்து விடுவிக்க வேண்டுமெனக் கோரி தற்போதைய நாடாளுமன்றத்தின் 117 எம்.பிக்கள் ஒப்பமிட்ட மனு ஒன்றும் கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த மனுவில் முதலில் ஒப்பமிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஓரிரு தினங்களிலேயே அந்த மனுவில் இருந்து தாம் விலகுகின்றார் என்று அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இப்படிப் பொறுப்பற்ற ஜனாதிபதி ஆணை குழு ஒன்றின், தெளிவான காரணங்கள், விளக்கங்கள் கூறப்படாத பரிந்துரை மற்றும் அரசியல் தரப்புக்களின் அரசியல் நோக்கம் கொண்ட கோரிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையிலேயே துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு அளித்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அதன் விளைவாக நீதிமன்றத்தினால் குட்டுப் படும் நிலையை எதிர்கொண்டு இருக்கிறார்.

கொழும்பு றோயல் பார்க் அடுக்குமாடிக் குடியிருப்பில் இளம் யுவதி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட அந்த யுவதியின் காதலனுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக் காலத்தின் இறுதியில் - கடைசிக் கட்டத்தில் - அவசர அவசரமாக பொது மன்னிப்பு வழங்கி அவரை விடுவித்திருந்தார். விடுதலை கிட்டிய கையோடு, அந்த இளைஞன் இலங்கையை விட்டு வெளியேறி விட்டார். அந்த மன்னிப்பு விடயமும் உயர் நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் உள்ளது. அது விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானமும் உயர்நீதிமன்றத்தின் விமர்சனத்திற்கு உள்ளாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்ட பல தமிழ் இளைஞர்களுக்கு பல ஜனாதிபதிகளினால் பொது மன்னிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த மன்னிப்புகள் வழங்கப்பட்டு 31 நாள்களுக்குள் யாருமே அவற்றை எதிர்த்து அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்யவில்லை. அவற்றை இனிமேல் காலம் கடந்து, சட்ட சர்ச்சைக்கு உட்படுத்த முடியாது என்பது ஆறுதல் தரும் விடயமாகும்.

# இலங்கை கடற்படையினரால் அடுத்தடுத்து மீனவர்கள் கைது

## - மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்




"இலங்கை கடற்படையினரின் சிறைபிடிப்பு நடவடிக்கைகளில் எந்த தளர்வும் இருப்பதாகத் தெரியவில்லை. இத்தகைய தன்னிச்சையான கைது நடவடிக்கைகளை தடுக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும். இலங்கை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து படகுகளையும் விடுவிக்க தெளிவான காலக்கெடுவை நிர்ணயிக்க வேண்டும்."

– இவ்வாறு வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்களும் அவர்களது மீன்பிடிப்படகுகளும் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவது குறித்தும் கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவது குறித்து தனது ஆழ்ந்த வேதனையை தமிழக முதல்வர் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "நாகப்பட்டினம் மீன்பிடித் துறை முகத்திலிருந்து ஜனவரி 13 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களையும், அவர்களின் விசைப்படகையும் இலங்கைக் கடற்படையினர் ஜனவரி 15 ஆம் திகதி சிறைபிடித்தனர் என்றும், மற்றொரு சம்பவத்தில், ராமநாதபுரம், பாம்பன் பகுதியைச் சேர்ந்த 18 மீனவர்களையும், அவர்களது இரண்டு விசைப் படகுகளையும் ஜனவரி 16 ஆம் திகதி இலங்கை கடற்படையினர் சிறை பிடித்துள்ளனர்.

கடந்த மூன்று நாள்களில் இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை அடுத்தடுத்து சிறைபிடித்துள்ளனர். இத்தகைய கைது நடவடிக்கைகள் மீன்பிடி தொழிலை மட்டுமே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியுள்ள மீனவ சமூதாயத்தினரிடையே பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கியுள்ளது.

இலங்கை கடற்படையினரின் சிறைபிடிப்பு நடவடிக்கைகளில் எந்த தளர்வும் இருப்பதாகத் தெரியவில்லை. இத்தகைய தன்னிச்சையான கைது நடவடிக்கைகளை தடுத்திட இலங்கை அரசுக்கு வலியுறுத்திட வேண்டும். இலங்கை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து படகுகளையும் விடுவிக்க தெளிவான காலக்கெடுவை நிர்ணயிக்க வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசுடன் இந்த விவகாரத்தை வலுவாக எடுத்துச் செல்ல வேண்டும்." என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரை முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பெங்களூர் நோக்கி பயணித்த விமானத்தின் கழிப்பறைக்குள் சிக்கிய பயணியால் பரபரப்பு

இந்தியாவின் மும்பையில் இருந்து பெங்களூர் நோக்கி பயணித்த ஸ்பைஸ் ஜெட் விமானத்தில், பயணி ஒருவர் கழிப்பறையில் சிக்கியுள்ளார்.

அந்த பயணி விமானத்தின் கழிப் பறைக்குச் சென்றபோது, அதன் கதவு திறக்க முடியாதபடி சிக்கிக் கொண் டுள்ளது.

இதன் காரணமாக அந்த பயணி கழிப்பறையில் இருந்தவாறே ஒரு மணித்தியாலமும் 50 நிமிடங்களும் பயணித்துள்ளார்.

பின்னர் பெங்களூரில் விமானம் தரையிறங்கியதும் பயணி மீட்கப்பட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சம்பவத்திற்கு ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் மன்னிப்பு கோரியுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகின்றது.




# அலங்கா நல்லூரில் வெற்றி பெற்ற செந்தில் தொண்டமானின் காளை!



அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில் கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் காளை வெற்றி பெற்றுள்ளது.

தமிழக அமைச்சர் மூர்த்தியால் அலங்கா நல்லூரில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ஜல்லிக்கட்டுப் போட்டியில், வெற்றிபெற்ற செந்தில் தொண்டமானின் காளைக்கு தங்க நாணயத்தை பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செந்தில் தொண்டமானிடம் தங்க நாண யத்தை கையளித்தார்.

# ஏவுகணைத் தாக்குதல் எதிரொலி: ஈரான் தூதரை வெளியேற்றியது பாகிஸ்தான்




பாகிஸ்தான் மீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலை அடுத்து, அந்த நாட்டு தூதரை பாகிஸ்தான் வெளியேற்றி உள்ளது.

இது தொடர்பாக இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் வெளியுறவு செய்தித் தொடர்பாளர் மும்தாஜ் ஜாரா பலூச்,

"ஈரானில் உள்ள தனது தூதரை திரும்பப் பெற்றுக்கொள்ள பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. பாகிஸ்தானுக்கான ஈரான் தூதர் தற்போது தனது நாட்டுக்கு சென்றுள்ளார். தற்போதைக்கு அவர் பாகிஸ்தானுக்கு வர மாட்டார்" என தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மீது ஈரான் நேற்று முன்தினம் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தானில் உள்ள ஜெய்ஷ் அல்- அட்ல் என்ற அமைப்பை குறிவைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஈரான் நாட்டு அரசு ஊடகம் தெரிவித்தது.

சன்னி இஸ்லாமிய பிரிவைச் சேர்ந்த இந்த அமைப்பு, ஈரானின் சிஸ்டன் பலுசிஸ்தான் மாகாணத்தில் அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருவதாக ஈரான் குற்றம் சாட்டி உள்ளது. குறிப்பாக, பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரை குறிவைத்து ஜெய்ஷ் அல்-அட்ல் தாக்குதல் நடத்துவதாக அந்த நாடு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக அந்த அமைப்பை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி உள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம்,

"பாகிஸ்தான் நாட்டின் வான் வெளியில் ஈரான் அத்துமீறி நுழைந்து நடத்திய தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். மூன்று சிறுமிகள் காயமடைந்துள்ளனர். இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

தீவிரவாதம் பொதுவான அச்சுறுத்தல் என பாகிஸ்தான் சொல்லி வருகிறது. அதைத் தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை.

இந்த மாதிரியான தாக்குதல்கள் அண்டை நாடுகளில் நம்பிக்கையை பாழாக்கும். தூதரக ரீதியாக பிரச்சினையை அணுக பல்வேறு வாய்ப்புகள் உள்ளபோது, ஈரான் தேர்ந்தெடுத்த வழி மிகவும் தவறானது" என குறிப்பிட்டுள்ளது.

# எத்தியோப்பியாவில் பட்டினியால் 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

எத்தியோப்பியாவின் டிக்ரே பகுதியில் கடந்த ஆண்டு ஜூலை முதல் 200 இற்கும் மேற்பட்டோர் பட்டினியால் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் 47 சதவீதமானோர் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், டிக்ரே பகுதியில் வாழும் 89 வீத மக்களுக்கு தற்போது உணவு உதவி தேவைப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# பிரித்தானியாவில் கடும் பனிப்பொழிவு: சிவப்பு எச்சரிக்கை



கடும் பனிப்பொழிவு காரணமாக பிரித்தானிய மக்களுக்கு மீண்டும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள பாடசாலைகளும் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், பிரித்தானியாவில் மஞ்சள் மற்றும் சிவப்பு வானிலை எச்சரிக்கைகள் நடைமுறையில் இருப்பதால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என செய்திகள் வெளியாகின.

அத்தோடு, பனிப்புயல் போன்ற நிலைமைகளினால் மின் தடை மற்றும் வேறு பல சேவைகள் முடக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, பயண இடையூறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் ரயில் மற்றும் விமான சேவைகளும் தாமதமாகலாம், இல்லாவிட்டால் ரத்து செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், சுமார் 100 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளின் செயற்பாடுகளும் இடைநிறுத்தப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.




# ஓலைத்தொடுவாயில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த பன்னிருவர் கைது!

(மன்னார் நிருபர்)

மன்னார் ஓலைத்தொடுவாய் கடற்பரப்பில் சட்டவிரோதமாக இரவு நேர கடலட்டை தொழிலில் ஈடுபட்ட 12 பேர் கடற்படையினரால் நேற்றுப் புதன் கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓலைத்தொடுவாய் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது ஓலைத்தொடுவாய் கடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இரவு நீரில் மூழ்கி கடலட்ட பிடித்துக் கொண்டிருந்த நிலையில் 12 பேரைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதன் போது 4 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சுமார் 968 கடலட்டைகள், 34 சங்குகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்த 22 வயதுக்கும் 48 வயதுக்கு இடைப்பட்டவர்கள் ஆவர். கைப்பற்றப்பட்ட கடலட்டைகள் மற்றும் சங்குகள் ஏல விற்பனை ஊடாக விற்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் பொருள்கள் தொடர்பில் மேலதிக சட்ட நடவடிக்கைகளை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.











# யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வவுனியாவிலும் விசேட பூஜை வழிபாடு

(கி.வசந்தரூபன்)

பொலிஸாரின் யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வவுனியா, குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் பொலிஸாரின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றன.

பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கிணங்க போதைப் பொருள் ஒழிப்பு வேலைத்திட்டமான யுக்திய நடவடிக்கை பொலிஸாரால் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு ஒரு மாதம் பூர்த்தி அடைந்துள்ளது. இந்நிலையில் யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வவுனியா, குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் பொலிஸாரின் ஏற்பாட்டில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த விசேட பூஜை வழிபாட்டில் வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் களுவாராய்ச்சி, தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயக்கொடி, பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமுதாயப் பொலிஸ் குழுவினர், சிவில் பாதுகாப்பு குழுவினர் எனப் பலரும் கலந்து கொண்டு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.
















# பல்கலை ஊழியர்கள் இன்று வேலைநிறுத்தம், கவனவீர்ப்பு

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் பண்யாற்றும் சகல பல்கலைக்கழகப் பணியாளர்களும் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்திலும், கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் அதைத் தொடர்ந்து விசேட பொதுக்கூட்டத்திலும் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஊழியர் சங்க

இணைச்செயலாளர் த.சிவரூபன் நேற்று வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அனைத்துப்பல்கலைக்கழகதொழிற்சங்க சம்மேளனம், பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழு மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியவற்றின் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் இடம்பெற்ற கூட்டங்களின் தீர்மானத்திற்கமைவாக, 16 ஆம் திகதி கல்வி அமைச்சருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில், நாளை (இன்று) வியாழக்கிழமை 18 ஆம் திகதி அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் "பல்கலைக் கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு" எதிர்ப்புத் தெரிவித்தும், உடனடித் தீர்வை வேண்டியும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதுடன் அன்றைய தினம் அவ்வவ் பல்கலைக்கழகங்களின் முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றையும் மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் நாளை (இன்று) ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தைப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொள்ளவிருக்கின்றது. அத்துடன் அன்றைய தினம் பல்கலைக்கழகத்தின் முன்றிலில் காலை 11 மணியளவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றையும் நடாத்துவதுடன் தொடர்ந்து விசேட பொதுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

எனவே பாதுகாப்பு பணியாளர்கள் தவிர்ந்த அனைத்து அங்கத்தவர்களும் இன்று வியாழக்கிழமை காலை பணியிடங்களுக்குச் செல்லாது, காலை 09 மணிக்கு இராமநாதன் மண்டப முன்றிலில் ஒன்றுகூடுமாறு வேண்டப்படுவதோடு, தவறாது ஊழியர் சங்க வரவுப் பதிவேட்டில் கையொப்பமிடுவது அவசியமானது என்பதையும் வலியுறுத்துகின்றோம். மேலும் அன்றைய தினம் நடைபெறும் விசேட பொதுக் கூட்டத்திலும் கலந்துகொள்ளுமாறும் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றாரர்கள். - என்று உள்ளது.

# சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் உள்ளிட்ட எழுவரின் விளக்கமறியல் நீடிப்பு



சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த உள்ளிட்ட 07 பேர் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தரமற்ற இமியுனோ குளோபியுலின் மருந்து கொடுக்கல், வாங்கல் தொடர்பான வழக்கு நேற்று மாளிகாகந்தை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஐஸழடநள டீழைவநஉா மருந்து நிறுவனத்தின் உரிமையாளர் சுதத் ஜானக்க பெர்னாண்டோ, ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி, வைத்தியர் விஜித் குணசேகர உள்ளிட்ட 07 பேரின் விளக்கமறியலே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.




# யாழ்ப்பாண வர்த்தக சந்தையை குழப்புகிறது யாழ் மாநகரசபை!

## ஆளுநரிடம் முறையிட்டுள்ளது யாழ். தொழில்துறை மன்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாண வர்த்தக சந்தையை குழப்பும் விதமாக யாழ்.மாநகர சபை தொழிற்பட்டு வருவது தொடர்பில் ஆளுநருக்கு தெரியப்படுத்தி உள்ளோம். ஆளுநரிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காவிடின் அடுத்து வரும் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வர்த்தக சந்தையை நடத்த மாட்டோம் என யாழ்ப்பாண தொழில்துறை மன்றத்தின் தலைவர் கே. விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

வர்த்தக சந்தை தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

14ஆவது யாழ்ப்பாண வர்த்தக சந்தை எதிர்வரும் 19ஆம் திகதி (நாளை) முதல் 21ஆம் திகதி வரையில், யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று தினங்களும் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரையில் இது நடைபெறும்.

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில் துறை மன்றத்துடன் இணைந்து, வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டை சேவைகள் நிறுவனத்தினால் குறித்த வர்த்தக சந்தை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வட பகுதியில் உள்ள தொழில் முயற்சியாளர்களின் நன்மைக்காக இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்தோம். இம்முறை 14ஆவது தடவையாகவும் நடத்தவுள்ளோம். இதன் மூலம் வடக்கு தொழில் முயற்சியாளர்களுக்கு உறுதுணையாக இருந்தோம்.




இந்த ஆண்டும் 300க்கும் மேற்பட்ட காட்சி கூடங்களை அமைத்துள்ளோம். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்களை எதிர்பார்க்கிறோம்.

இந்த கண்காட்சி ஒரு களியாட்ட நிகழ்வாக இருக்காது. இது தொழில் முயற்சியாளர்களுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுக்கும் ஒரு நடவடிக்கை.

அதேவேளை மாவட்ட செயலர் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 10 சிறு முயற்சியாளர்களுக்கும், தொழில் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட 10 சிறு முயற்சியாளர்களுக்கும் இலவசமாக காட்சி கூடங்களை வழங்கியுள்ளோம்.


எமது பிரதேசத்திற்கு தேவையானவற்றை இந்த கண்காட்சி ஊடாக அறிமுகப்படுத்தி வருகின்றோம். இம்முறையும் தொழினுட்பங்கள், புதுப்பிக்கதக்க சக்திகள் போன்றவற்றை அறிமுகப் படுத்தவுள்ளோம்.

இந்தக் கண்காட்சிக்காக இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் தங்கி நிற்க போகின்றனர். இதனால் யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதிகள், உணவகத் தொழில் துறை சார்ந்தோருக்கும் நன்மைகள் கிட்டும் என்பதுடன் யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலாத் துறை சார்ந்த நன்மைகளும் கிடைக்கும்.

இவ்வாறான செயற்பாடுகளை குழப்பும் முகமாக யாழ். மாநகர சபை செயற்படுகின்றமை எமக்கு வருத்தமே. மாநகர சபைக்கு வேறு நபர்கள் அழுத்தம் கொடுக்கிறார்கள் என நம்புகிறோம். இது தொடர்பில் மாவட்ட செயலர் மற்றும் வடமாகாண ஆளுநருக்குத் தெரியப்படுத்தி உள்ளோம்.

ஆளுநரிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என நம்புறோம். அவ்வாறு பதில் கிடைக்காது விடின் வேறு மாவட்டத்திற்கு இதனை நாம் மாற்ற வேண்டிய முடிவை நாங்கள் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். - என தெரிவித்தார்.

# ஆறுமுகனைப் போட்டுத் தள்ளியது கஞ்சிபானி இம்ரான் குழுவினரா?



கொழும்பு, மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்திய உயன தொடர் மாடி குடியிருப்புக்கு அருகில் நபர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் பாதாளக் குழு மோதல் தொடர்புபட்டுள்ளது எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவிலேயே துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவில் இருந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 40 வயதுடைய நபர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

'படா ரஞ்சி' என அழைக்கப்படும் செல்வம் ஆறுமுகன் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

இந்தியாவில் தலைமறைவாகியுள்ள பாதாளக் குழு உறுப்பினர் பூகுடு கண்ணாவின் உதவியாளராக இவர் செயற்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது. தைப்பொங்கலைக் கொண்டாட வந்திருந்த நிலையிலேயே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

நிழல் உலக தாதா கஞ்சிபானி இம்ரானின் தந்தை சில வருடங்களுக்கு முன்னர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அந்தச் சம்பவத்துக்குப் பழிதீர்க்கும் வகையில் கஞ்சிபானி இம்ரானின் சகாக்களால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

நிழல் உலக தாதா கஞ்சிபானி இம்ரான் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டிருந்தாலும், பின்னர் பிணையில் விடுதலையானதும், நாட்டைவிட்டு தப்பியோடினார் என்பது குறிப்பிடத்தக்கது.




# மின் கட்டணத் திருத்த யோசனை தொடர்பில் மக்களின் கருத்துகளைக் கேட்டறியத் திட்டம்

மின்கட்டணத் திருத்த யோசனை தொடர்பில் அடுத்த வாரம் முதல் பொதுமக்களிடம் கருத்துகளைக் கேட்டறியத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணத் திருத்த யோசனை, இலங்கை மின்சார சபையால் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு உட்பட்டு மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியத்தின் எதிர்ப்பு பேரணிக்கு நீதிமன்று தடை உத்தரவு

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த எதிர்ப்புப் பேரணி தொடர்பில் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படலாம் என மருதானை பொலிஸார் முன்வைத்த விடயங்களைக் கருத்தில் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித், அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கல்வெவ சிறிதம்ம தேரர் உள்ளிட்ட 09 பேருக்கு எதிராகத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்று முற்பகல் 11 மணி வரை மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டம் அல்லது பேரணியை நடத்த இவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவிற்கமைய, குலரத்ன மாவத்தை, ஒராபி பாஷா மாவத்தை, சங்கராஜ மாவத்தை, டீன்ஸ் வீதி, டார்லி வீதி, வைத்தியசாலை சதுக்கம் மற்றும் அதனை அண்மித்த வீதிகள் மற்றும் நடைபாதையில் இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டம் அல்லது பேரணியை நடத்த நீதிமன்றம் தடை விதித்துள்ளது.



# கண்ணீர்ப்புகைக் குண்டு வீசி, நீர்த்தாரைப் பிரயோகம் செய்து பல்கலை மாணவரின் ஆர்ப்பாட்டத்தை துரத்தியடித்த பொலிஸ்

கொழும்பு, விஜேராம மாவத்தையில் நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தை முன்னெடுத்து அவர்களைக் கலைத்தனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்தைக் கருத்திற் கொண்டு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவொன்றை நேற்று முற்பகல் பிறப்பித்திருந்தது.

அந்த உத்தரவின் பிரகாரம் பல்கலைக்கழக மாணவர்கள், டீன் வீதி, குலரத்ன மாவத்தை, டி.பி. ஜயா மாவத்தை உள்ளிட்ட கொழும்பின் பல பகுதிகளில் பொதுமக்கள் அல்லது பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில், அனைத்து பல்கலைக்காக மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியை கலைப்பதற்காகவே பொலிஸார் இந்த தாக்குதல் சம்பவத்தை முன்னெடுத்துள்ளனர்.

CLICK HERE VIDEO



# இன்றைய ராசி பலன்கள் - 18.01.2024




இன்று நீங்கள் செய்யும் எந்தச்செயலிலும் உணர்ச்சி வசப்பட வேண்டாம். நிதானமாகச் செயல்படுவதன் மூலம் நீங்கள் எதிர்மறை விளைவுகளைத் தவிர்க்கலாம். இன்று நீங்கள் வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் மனம் அமைதியடையும்.

இன்று தொழிலில் முன்னேற்றத்துக்கான வாய்ப்பு இல்லை. பணியில் சுமை அதிகமாக இருக்கும்.பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளவும்.

உங்கள் மனநிலையில் ஏற்படும் மாறுபாடு காரணமாக உங்கள் துணையிடம் மகிழ்ச்சியை வெளிப்படுத்த மாட்டீர்கள். உங்கள் துணையுடன் யதார்த்தமாகவும் சந்தோஷமாகவும் இருப்பது நல்லது.

செலவுகள் சற்று அதிகமாகக் காணப்படும். பணத்தை சிக்கனமாகக் கையாளவும். தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும்.




சூழ்நிலைக்குத் தக்கவாறு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். எந்த ஒரு விஷயத்தையும் பக்குவமாக அணுகுவதன் மூலம் வேறுபாடுகளைத் தவிர்க்கலாம்.

பணியில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணிச்சுமை அதிகமாகவும் கவலை தருவதாகவும் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் இருக்கும். அதனால் உங்கள் மகிழ்ச்சி பாதிக்கப்படலாம்.

நிதிநிலையில் அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். நிதிசம்பந்தமான விஷயங்களை கவனமாகக் கையாள வேண்டும்.

கண்களில் ஏற்படும் எரிச்சல் பாதிப்புகளை உண்டாக்கும் என்பதால் அதன் தீவிரத்தை உணர்ந்து கவனமாக இருக்க வேண்டும். அஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு




இன்று உங்களுக்கு மிகவும் முன்னேற்றமான நாளாக அமையும். வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்ந்து புதிய அனுபவங்களின் மூலம் நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படும் நாள்.

உங்கள் பணி மற்றும் தொழிலில் முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களது செயல்திறனில் திருப்திகரமான நிலை இருக்கும்.

இன்று கணவன் மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நல்ல புரிந்துணர்வுடன் இருப்பீர்கள். இனிமையான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு இலாபகரமான நாளாக அமையும். பணத்தை உபயோகமான விஷயத்திற்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று நீங்கள் தன்னம்பிக்கையுனும் அமைதியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும் நாள். ஊக்கம் மற்றும் உற்சாகத்துடன் காணப்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள் அனைத்து விதத்திலும் இன்று வளமான நாள்.

புதிய வாய்ப்புகள் அமைந்து வளர்ச்சிக்கு வழி வகுக்கும். பணி மற்றும் தொழில் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் திருப்தி அளிக்கத் தக்க வகையிலும் காணப்படும்.

உங்கள் வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாக வெளியே செல்வீர்கள். சந்தோஷத்தை அனுபவிக்கும் நாளாக அமையும்.

வருமானம் அதிகரிப்பதற்கான சாத்தியம் உளளது. நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான சூழ்நிலை காணப்படுகிறது. தேவையற்ற விஷயங்கள் சிந்திப்பதை தவிர்க்கவும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

வேலையில் கூடுதல் கவனம் செலுத்தவும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று எளிதில் உணர்ச்சி வசப்படும் நாளாக இருப்பதினால் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நட்புறவுடன் நடந்து கொள்ள முயற்சி செய்யவும்.

கவனச் சிதைவால் பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகள் செய்ய நேரிடும். எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

மன அழுத்தத்தின் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று உங்கள் தன்னம்பிக்கையும் உற்சாகமும் குறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பணிச் சுமை அதிகமாக இருக்கும். தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதினால் பணிகளை திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.

உங்கள் வாழ்க்கை துணையாரால் புறக்கணிக்கப்படுவதாக உணர்வீர்கள். பரஸ்பர உரையாடல் மற்றும் புரிந்துணர்வு மூலம் அதை தீர்க்கலாம்.

இன்று பண பரிவர்த்தனையில் சற்று சிரமங்கள் ஏற்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

தேவையற்ற கவலைகளின் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு காணப்படுகின்றது ஆரோக்கியமாக இருப்பதற்கு மனதை நிலையாக வைத்திருங்கள்.




இன்று சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்ற உறுதியுடன் இருப்பீர்கள். விரைவான முடிவு எடுப்பதற்கான அநுகூலமான மனநிலையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் உணர்வுகளை சக பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள். விருந்துகளில் கலந்து கொள்வீர்கள்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விழாவினைப்பற்றி உங்கள் துணையாருடன் கலந்தாலோசிப்பீர்கள். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்கள் சேமிப்புகளை அதிகரித்துக்கொள்ளும் நல்ல வாய்ப்பு இருக்கின்றது. உங்கள் நெருக்கமானவர்களுடைய விருந்தில் கலந்து கொள்ள பணத்தை செலவிடுவீர்கள்.




இன்று எளிதில் வெற்றி கிடைக்க சாத்தியம் உள்ளது. உங்கள் திறமையான தகவல் தொடர்பின் மூலம் மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். உங்கள் அனுகுமுறை வெற்றிச் சிகரங்களைத் தொட உங்களுக்கு உதவும்.

இன்று சவாலான பணிகளை எளிதில் எதிர்கொள்வீர்கள். உங்கள் பணிகளை எளிதில் விரைந்து முடிப்பீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையாருடன் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் நட்பான அனுகுமுறை அவருக்கு திருப்திகரமானதாக இருக்கும்.

இன்று கையிருப்பு பணத்தைக் கொண்டு வசதியாக இருப்பீர்கள். உங்கள் பணத்தை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.01.2024

## தனுசு

இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். இலக்கில் வெற்றி காண்பதை கடினமாக உணர்வீர்கள். மன அழுத்தத்தை போக்க யோகா அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும் நாள். அதிக வேலை காரணமாக அதை முடிப்பதில் சிரமும் எரிச்சலும் இருக்கும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் வாழ்க்கைத் துணையாரின் தவறுகளை சுட்டிக்காட்டுவீர்கள்.

இன்று பணவரவுக்கான சாதகமான சூழ்நிலை இல்லை. அதனால் சேமிப்பும் இருக்காது.

இன்று ஆரோக்கியம் ஊக்கமளிக்கும் வகையில் இருக்காது. சளி மற்றும் தலைவலி உபாதைகள் ஏற்படலாம்.

## கும்பம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். புதிய மனிதர்கள் மற்றும் புதிய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அவர்களை சந்திப்பதன் மூலம் உங்கள் மனதில் மகிழ்ச்சியும் நிறைவும் ஏற்படும்.

பணியிடத்தில் சந்திப்புகளின் பொழுது நீங்கள் புதுமையான கருத்துக்களைக் கூறுவீர்கள். இதை உங்கள் மேலதிகாரிகள் ஒப்புக் கொண்டு பாராட்டுவார்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப் புழக்கம் சிறப்பாக காணப்படும். உங்களால் சேமிப்பை உயர்த்த முடியும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## மகரம்

இன்றைய நாள் உங்கள் முற்போக்கான வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. எதையும் சமநிலையோடு அனுக வேண்டும் புத்திசாலிதனத்தை பயன்படுத்தி சவால்களை சமாளிக்க வேண்டும்.

இன்று கவனக்குறைவு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணிகளை கவனத்துடன் செய்ய வேண்டும். உங்கள் பணியை திறம்பட செய்வதற்கு உங்கள் சக பணியாளர்களின் அறிவுரையை ஏற்று அதன் படி செயல்பட வேண்டும்.

இன்று பதட்டத்துடன் காணப்படுவீர்கள். அதன் விளைவாக காரணமே இல்லாமல் உங்கள் துணையிடம் குற்றம் கண்டுபிடிப்பீர்கள்.

இன்று பண வரவு சுமாராக இருக்கும். இன்று நிதி நிலையை மேம்படுத்துவதற்கான அதிர்ஷ்டம் இல்லை.

## மீனம்

இன்று அசௌகரியங்கள் காணப்படும். சவால்களை சமாளிக்க இன்று நீங்கள் உங்கள் பணிகளைத் திட்டமிட வேண்டும். தளரா நம்பிக்கையுடன் தேவையற்ற எண்ணங்களிலிருந்து விடுபடவேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சாதகமான பலன்களைக் கொடுக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரனையான போக்கை மேற்கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்

இன்று பண வரவுக்கான சாத்தியம் இல்லை. உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு உங்கள் பணத் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.








# மன்னார் கடற்பரப்பிற்குள் நுழைந்த 18 தமிழக மீனவரும் விளக்கமறியலில்

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடு பட்ட 18 இந்திய மீனவர்களையும் எதிர் வரும் 31 திகதி வரை விளக்கமறிய லில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று மாலை உத்தரவிட்டார்.

இலங்கையின் தென் கடல் கடற் பரப்பிற்குள் அத்துமீறி உள்நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் தங்கச்சிமடம் பகுதியை சேர்ந்த 18 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக உள்நுழைந்து இரண்டு ட்றோலர் படகுகளில் மீன் பிடியில் ஈடுபட்ட தமிழகக் கடல் தொழிலாளர்களே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான 18 கடல் தொழிலாளர்க ளும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு ட்றோலர் படகுகளுடன் கடற்படையின ரால் தாழ்வுபாடு கடற்படை முகாமுக்கு கொண்டுவரப்பட்டனர்.

அதன்பின்னர் 18 கடற் தொழிலா ளர்களும் மன்னார் மாவட்ட கடற்றொ ழில் நீரியல் வளத் திணைக்கள அதி காரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களிடம் விசாரணைகளின் பின்னர் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் நேற்று மாலை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் 18 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.







# எடப்பாடி பழனிசாமியை சந்தித்தார் அமைச்சர் ஜீவன்

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக எதிர்க்கட்சி தலைரும், முன்னாள் தமிழக முதல்வருமான எடப்பாடி பழனி சாமிக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சென்னையில் உள்ள முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் 'செல்வந்தி' இல்லத்தில் நேற்று நடை பெற்ற இந்தச் சந்திப்பில் முன்னாள் அமைச்சரும், தமிழக சட்டமன்ற உறுப் பினருமான கடம்பூர் கே. ராஜுவும் பங்கேற்றுள்ளார்.

மரியாதை நிமித்தம் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது எதிர்க்கட்சி தலைவருக்கு பொங்கல் வாழ்த்து களை தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையகத் தமிழர்களின் மேம்பாட்டுக்காக அ.தி.மு.க. தொடர்ந் தும் குரல் கொடுத்துவருவதற்கு நன்றி களையும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 'நாம் - 200' நிகழ்ச்சி குறித்தும், எதிர்வரும் 21 ஆம் திகதி மலையகத்தில் நடைபெறவுள்ள தேசிய பொங்கல் விழா தொடர்பிலும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெளிவுபடுத்தி யுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் மலை யக பகுதிகளுக்கு பயணம் மேற் கொள்ளுமாறும் எடப்பாடி பழனி சாமிக்கு அமைச்சர் ஜீவன் தொண்ட மான் அழைப்பு விடுத்துள்ளார்.



# பசறையில் நில வெடிப்புகள்: பொதுமக்களுக்கு எச்சரிக்கை


பசறை பிரதேச சபைக்குட்பட்ட மீதும்பிட்டி 96 ஏக்கர் பகுதியில், நிலத்தில் பாரிய வெடிப்புகள் ஏற் பட்டுள்ளன. அத்துடன், நிலம் தாழி றங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இந்தநிலையில், அந்த பகுதி யில் வசிக்கும் 19 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேரை அங்கிருந்து பாது காப்பான இடங்களுக்கு செல்லுமாறு தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறு வகம் அண்மையில் அறிவுறுத்தியி ருந்தது.

எனினும், தாம் தங்குவதற்கான எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் இதுவரையில் ஏற்படுத்திக் கொடுக்கப் படவில்லை என பிரதேச மக்கள் குற் றஞ்சாட்டுகின்றனர்.

சிலர் உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ள போதிலும், பெரும் பாலானவர்கள் எவ்வித பாதுகாப் பும் இன்றி, மண்சரிவு ஏற்படும் ஆபத் துள்ள மீதும்பிட்டி - 96 ஏக்கர் பகுதி யிலேயே தாம் வசித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது அன்றாட செயற்பாடு களை மிகவும் அச்சத்துடனேயே தாங்கள் முன்னெடுத்து வருகின்ற னர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ள னர்.



# குறிஞ்சாக்கேணி பாலத்தினூடாக போக்குவரத்துகள் ஆரம்பமாகின!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை, குறிஞ்சாக்கேணி இரும்புப் பாலத்தினூடாகப் போக்குவரத்துகள் ஆரம்பமாகின.

கடந்த 07 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட குறிஞ்சாக்கேணி இரும்புப் பாலத்தின் நிர்மாண வேலைகள் முடிவடைந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அந்தப் பாலத்தினூடாக போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாலத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தியானது சம்பந்தமாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள் மற்றும் உத்தியோஸ்தர்கள் பார்வையிட்டனர்.

# குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு உதவி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை, பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நீகழ்வு அண்மையில் உகன பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சிறுவர் அபிவிருத்தி உத்தியோஸ்தர் இரேஸா சஞ்ஜீவனியின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் சிந்தன உதார நாணயகார தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம மற்றும் பேன் ஏஸியா வங்கி உதவி செயற்பாட்டு அதிகாரி புத்திக பேரேரா ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.



